
# LORDS TODAY


LORDS TODAY - International Social Media & Magazine
LORDS TODAY RNI Ref. No. 1287921 Title Code : TNBL04354 | Magazine : October 2021
WhatsApp : 91-98405 59673 Editor | Publisher & Owner : Lords. M. PAULRAJ
Free for - LORDS | LIONS | ROTARY & All International Social Service CLUBS





Lords மபால்ராஜ்
Founder | International President

## LORDS CLUBS INTERNATIONAL






2021- 16796675761




www.lordsclubs.com



# தலையங்கம்...

## உலக மக்களின் மூன்று மதம் வேத நூல்கள்

### தொடர் 9

|  |  |  |
|---|---|---|
| **BIBLE Tamil** | **KURAN Tamil** | **BHAGAVAD GITA-Tamil** |
| 6 Page's | 6 Page's | 6 Page's |
| தொடரும்..... | தொடரும்..... | தொடரும்..... |



**உலக ஊடக வரலாற்றில் முதல்முறையாக** உலக மக்கள் நலன்கருதி உலகிலேயே முதல்முறையாக உலகத்தரம் வாய்ந்த 3 மதம் வேதநூல் மெகாத்தொடர் ஒவ்வொரு மாதமும் பகவத் கீதை ஆறு பக்கங்களும் பைபிள் ஆறு பக்கங்களும் குரான் ஆறு பக்கங்களும் ஆக மொத்தம் 18 பக்கங்கள் இனி மாதம் தோரும் தவறாமல் தமிழில் பிரசுரிக்கப்பட்டு வெளிவரும் என்று அனைத்து வாசகர்களுக்கும் மிகுந்த மகிழ்ச்சியுடனும் அன்புடனும் தெரிவித்துக் கொள்கின்றேன். நான் முற்றிலுமாகப் படித்து முடித்த இந்த 3மத வேதநூல்களையும் பொதுமக்கள் அனைவரும் பக்த்தியுடன் படித்து ஊழல் பாவங்கள் உட்பட அனைத்து பாவங்களும் செய்யாமல் நேர்மையுடனும் ஒற்றுமையுடனும் வாழ வேண்டும் என பொதுமக்கள் அனைவருக்கும் அன்புடன் வேண்டுகோள் வைக்கின்றேன். இனி நல்லதை படித்து நல்லதை படைத்து, இவ்வுலக மக்களுக்கு நல்லதையே செய்து பொதுமக்களின் அனவைருடைய பொருளாதாரத்தையும் உயர்திடுவோம்.

அன்புடன் உங்கள்,

லார்ட்ஸ் மபால்ராஜ்

**LORDS TODAY**
RNI Ref. No. : 1287921 Title Code : TNBL04354
International social media and magazine
Editor | Publisher | and Owner

**LORDS CLUBS INTERNATIONAL**
Govt. Reg. No. : 1359/2013
International social service clubs
International President | and Founder
Web : www.lordsclubs.com

# BIBLE

## மெகா தொடர்
## PART - 9




## தொடக்கநூல் அதிகாரம் – 20 – திருவிவிலியம்

### ஆபிரகாமும் அபிமெலக்கும்

1 ஆபிரகாம் அங்கிருந்து புறப்பட்டு நெகேபுக்குச் சென்று
காதேசுக்கும் சூருக்கும் இடைப்பட்ட பகுதியில் வாழ்ந்து, பின்னர் கெராரில் தங்கினார்.

2 அப்போது ஆபிரகாம் தம் மனைவி சாராவைத் தம் சகோதரி என்று சொல்லிக்
கொண்டமையால், கெரார் மன்னனாகிய அபிமெலக்கு ஆளனுப்பி அவரை
அழைத்துவரச் செய்தான்.

3 இரவில் ஆண்டவர் அபிமெலக்குக்குக் கனவில் தோன்றி, இதோ, நீ
அழைத்துவரச் செய்த பெண்ணின் பொருட்டு நீ சாகப் போகிறாய். ஏனெனில் ,அவள்
ஒருவனுக்கு வாழ்க்கைப்பட்டவள் என்று அவனிடம் கூறினார்.

4 அதுவரை அவரைத் தொடாதிருந்த அபிமெலக்கு அது கேட்டு மறுமொழியாக, என்
தலைவரே, உண்மையாகவே நேர்மைமிக்க இனத்தவரை நீர் அழிப்பீரோ?

5 அவன் அவளைத் தன் சகோதரி என்றும் அவள் அவனைத் தன் சகோதரன் என்றும்
அறிமுகப்படுத்தவில்லையா? நான் நேரிய இதயத்தோடும் தூய கைகளோடும்
இதைச் செய்தேன் என்றான்.

6 கடவுள், கனவில் தோன்றி, அவனை நோக்கி, நீ நேரிய இதயத்தோடு அப்படிச்
செய்தாயென்று அறிவேன். அதனால்தான் எனக்கு எதிராகப் பாவம் செய்யாத
உன்னைக் காப்பாற்றி, அவளைத் தொடவிடவில்லை.

7 உடனே அந்தப் பெண்ணை அவளின் கணவனிடம் அனுப்பிவிடு. ஏனெனில், அவன் ஓர்
இறைவாக்கினன். அவன் உனக்காக மன்றாடினால் நீ பிழைப்பாய். அவளை நீ
அனுப்பாவிடில் நீயும் உன்னைச் சேர்ந்த யாவரும் செத்து மடிவீர்கள் என்பது உறுதி
என்றார்.

8 அபிமெலக்கு அதிகாலையில் எழுந்து தன் வேலைக்காரர் அனைவரையும் அழைத்து,
அந்த வார்த்தைகளை எல்லாம் அவர்கள் கேட்கும்படி சொன்னான். அதைக் கேட்டு
அவர்கள் மிகவும் அச்சமுற்றனர்.

9 பின் அபிமெலக்கு ஆபிரகாமை வரவழைத்து, நீர் எங்களுக்கு என்ன காரியம்
செய்து விட்டீர்? எனக்கும் என் நாட்டுக்கும் இப்பெரும் பழி நேரும்படி நான் உமக்கு
என்ன தீங்கு செய்தேன்? செய்திருக்கக் கூடாதவற்றை நீர் எனக்குச் செய்துவிட்டீரே!

10 நீர் எக்காரணத்தைக் கொண்டு இக்காரியம் செய்தீர்? என்ற அவரிடம் வினவினான்.

11 ஆபிரகாம் மறுமொழியாக, இவ்விடத்தில் கடவுளுக்கு அஞ்சுவார் எவரும்
இல்லையென்றும் என் மனைவியை அடையும்பொருட்டு என்னைக் கொன்று
விடுவார்கள் என்றும் நினைத்தேன்.

12 மேலும், உண்மையில் இவள் என் சகோதரியே; இவள் என் தந்தைக்குப் பிறந்த
மகள். ஆனால், என் தாயின் மகள் அல்ல; அவளை நான் மணந்து கொண்டேன்.

13 மேலும், நான் என் தந்தையின் வீட்டைவிட்டுக் கடவுள் என்னை அலைந்து திரியச்
செய்தபோது, நீ எனக்குப் பேருதவி செய்ய வேண்டும்; நாம் செல்லுமிடமெல்லாம்,
நான் உன் சகோதரன் என்று சொல் என்று அவளிடம் நான் கூறியிருந்தேன்
என்றார்.




14 அப்பொழுது அபிமெலக்கு ஆடு மாடுகளையும், வேலைக்காரர், வேலைக்காரிகளையும் ஆபிரகாமுக்குக் கொடுத்ததுமன்றி, அவர் மனைவி சாராவையும் அவரிடம் ஒப்படைத்தான்.

15 மேலும், அபிமெலக்கு, இதோ உமக்கு முன்பாக எனது நாடு இருக்கிறது. உமக்கு எங்கு விருப்பமோ அங்கு நீர் வாழலாம் என்றான்.

16 மேலும், சாராவை நோக்கி, இதோ உன் சகோதரருக்கு ஆயிரம் வெள்ளிக்காசு கொடுத்துள்ளேன். உன்னோடு இருப்பவர்களின் பார்வையிலிருந்து அது மறைக்கும் திரையாக அமையட்டும். அனைவர் பார்வையிலும் உன் பழி நீங்கிவிட்டது என்றான்.

17 ஆபிரகாம் கடவுளிடம் மன்றாடவே, கடவுளும் அபிமெலக்கையும் அவன் மனைவியையும் அடிமைப் பெண்களையும் குணமாக்கி அவர்களுக்குப் பிள்ளைப்பேறு அளித்தார்.

18 ஏனென்றால், ஆபிரகாமின் மனைவி சாராவை முன்னிட்டு ஆண்டவர் அபிமெலக்கு வீட்டிலிருந்த பெண்களை மலடிகளாக்கியிருந்தார்.

# தொடக்கநூல் அதிகாரம் – 21 – திருவிவிலியம்

## ஈசாக்கின் பிறப்பு

1 ஆண்டவர் தாம் கூறியிருந்தபடி சாராவைக் கண்ணோக்கினார். ஆண்டவர் தம் வாக்குறுதிக்கேற்ப சாராவுக்குச் செய்தருளினார்.

2 கடவுள் வாக்களித்தபடி, குறிப்பிட்ட அதே காலத்தில் சாரா கருத்தாங்கி, ஆபிரகாமுக்கு அவரது முதிர்ந்த வயதில் ஒரு மகனைப் பெற்றெடுத்தார்.

3 ஆபிரகாம் தமக்குப் பிறந்த, சாரா தமக்குப் பெற்றுக்கொடுத்த, மகனுக்கு ஈசாக்கு என்று பெயரிட்டார்.

4 கடவுள் கட்டளையிட்டபடி, ஆபிரகாம் தம் மகன் ஈசாக்கு பிறந்த எட்டாம் நாளன்று அவனுக்கு விருத்தசேதனம் செய்தார்.

5 அவருடைய மகன் ஈசாக்கு அவருக்குப் பிறந்த பொழுது அவருடைய வயதோ நூறு.

6 அப்பொழுது சாரா, கடவுள் என்னைச் சிரிக்க வைத்தார் என்றும் இதைக் கேட்கும் அனைவரும் என்னோடு சேர்ந்து சிரிப்பர் என்றும் சொன்னார்.


7 மீண்டும் அவர், சாரா தம் புதல்வர்களுக்குப் பாலூட்டுவார் என்று ஆபிரகாமிடம் யாராவது சொல்லியிருப்பார்களா? ஆயினும், இதோ அவருக்கு அவரது முதிர்ந்த வயதில் நான் ஒரு மகனைப் பெற்றெடுத்துள்ளேன் என்றார்.

8 அந்தக் குழந்தை வளர்ந்து பால் குடியும் மறந்தது. அப்படிப் பால் குடிப்பதை நிறுத்திய நாளன்று ஆபிரகாம் பெரியதொரு விருந்து அளித்தார்.

## ஆகாரும் இஸ்மயேலும் வெளியேற்றப்படல்

9 பின்னர், எகிப்தியளான ஆகார் ஆபிரகாமுக்குப் பெற்றெடுத்த மகன் சிரித்து விளையாடுவதைச் சாரா கண்டு,

10 ஆபிரகாமை நோக்கி, இந்தப் பணிப்பெண்ணையும் அவள் மகனையும்




துரத்திவிடும். ஏனென்றால், பணிப்பெண்ணின் மகன் என் மகன் ஈசாக்குடன் பங்காளியாய் இருக்கக் கூடாது என்றார்.

11 தம் மகனுக்கு எதிரான இவ்வார்த்தை ஆபிரகாமுக்கு மிகுந்த வேதனை அளித்தது.

12 அப்போது கடவுள் ஆபிரகாமை நோக்கி, பையனையும் பணிப்பெண்ணையும் குறித்து வேதனைப்படாதே. சாரா உனக்குச் சொல்வதையெல்லாம் அப்படியே செய். ஏனெனில், ஈசாக்கின் மூலமே உன் வழிமரபு விளங்கும்.

13 பணிப்பெண்ணின் மகனும் உன் வித்தாயிருப்பதால், அவனிடமிருந்தும் இனமொன்று தோன்றச் செய்வேன் என்றார்.

14 எனவே, ஆபிரகாம் காலையில் எழுந்து, அப்பத்தையும், தோற்பை நிறையத் தண்ணீரையும் எடுத்து ஆகாரிடம் கொடுத்தார்; அவற்றை அவள் தோள்மேல் வைத்து குழந்தையையும் அவளுடன் அனுப்பி வைத்தார். அவளும் புறப்பட்டுப் போய் பெயேர்செபா என்னும் பாலைநிலத்தில் அலைந்து திரிந்தாள்.

15 தோற்பையிலிருந்த தண்ணீர் தீர்ந்தபின் அவள் புதர் ஒன்றின் அடியில் குழந்தையைக் கிடத்தினாள்.

16 பின்பு, அவள் முன்புறம் சென்று அம்புஎறி தூரத்தளவில் உட்கார்ந்து கொண்டாள். குழந்தை சாவதைப் பார்க்கச் சகியேன் என்று கூறி, முன்புறமிருந்து கொண்டே கூக்குரலிட்டு அழுதாள்.

17 அப்போது கடவுள் பையனின் அழுகுரலைக் கேட்டார். ஆண்டவரின் தூதர் வானத்தினின்று ஆகாரைக் கூப்பிட்டு, ஆகார்! உனக்கு நிகழ்ந்தது என்ன? அஞ்சாதே. ஏனெனில், கிடத்தியிருக்கிற இடத்தினின்று பையனின் அழுகுரலை கடவுள் கேட்டருளினார்.

18 நீ எழுந்து பையனைத் தூக்கி விடு. அவனை உன் கையில் பிடித்துக் கொள். ஏனெனில், அவனிடமிருந்து பெரிய இனமொன்று தோன்றச் செய்வேன் என்றார்.

19 அப்பொழுது கடவுள் அவள் கண்களைத் திறந்துவிட, அவள் நீருள்ள கிணற்றைக் கண்டாள். அவள் அங்குச் சென்று தோற்பையை நீரால் நிரப்பிப் பையனுக்குக் குடிக்கக் கொடுத்தாள்.

20 கடவுளும் பையனோடு இருந்தார். அவன் வளர்ந்து பாலை நிலத்தில் குடியிருந்தான். அம்பு எய்வதில் வல்லவனானான்.


21 அவன் பாரான் என்னும் பாலைநிலத்தில் வாழ்ந்து வருகையில், அவன் தாய் எகிப்து நாட்டைச் சார்ந்த ஒரு பெண்ணை அவனுக்கு மணமுடித்து வைத்தாள்.

### ஆபிரகாம்–அபிமெலக்கு உடன்படிக்கை

22 அக்காலத்தில் அபிமெலக்கு தன் படைத்தலைவன் பிக்கோலோடு வந்து ஆபிரகாமை நோக்கி, நீர் செய்கிற யாவற்றிலும் கடவுள் உம்முடனே இருக்கிறார்.

23 ஆகையால், எனக்கும் என் புதல்வருக்கும் என் இனத்தாருக்கும் நீர் வஞ்சனை செய்யாமல், உமக்கு நான் இரக்கம் காட்டியதுபோல எனக்கும், நீர் பிழைப்புக்காக வந்த இந்த நாட்டிற்கும், நீர் இரக்கம் காட்டுவதாகக் கடவுள் பெயரால் ஆணையிட்டு எனக்கு வாக்களியும் என்றான்.

# BIBLE




24 அதற்கு ஆபிரகாம், அவ்விதமே ஆணையிட்டு வாக்களிக்கிறேன் என்று கூறினார்.

25 பிறகு, அபிமெலக்கின் ஊழியர்கள் கைப்பற்றியிருந்த நீருள்ள கிணறு ஒன்றைப் பற்றி அவனிடம் ஆபிரகாம் முறையிட்டார்.

26 அபிமெலக்கு அதற்கு மறுமொழியாக, இந்தக் காரியத்தைச் செய்தவன் யாரென்று எனக்குத் தெரியாது. நீரும் அதை எனக்குத் தெரிவிக்கவில்லை. இன்றுதான் இதைப்பற்றிக் கேள்விப்படுகிறேன் என்றான்.

27 பின் ஆபிரகாம் ஆடு மாடுகளை அபிமெலக்கிடம் கொண்டுவந்து கொடுக்க, அவர்கள் இருவரும் ஒருவரோடு ஒருவர் உடன்படிக்கை செய்து கொண்டனர்.

28 அப்பொழுது ஆபிரகாம் மந்தையினின்று ஏழு பெண் ஆட்டுக்குட்டியைப் பிரித்தெடுத்துத் தனியாக நிறுத்தினார்.

29 அபிமெலக்கு ஆபிரகாமை நோக்கி, நீர் இவ்வேழு பெண் ஆட்டுக்குட்டிகளைத் தனியாக நிறுத்தி வைத்திருப்பதன் காரணம் என்ன? என்று கேட்டான்.

30 அவர், இந்தக் கிணற்றைத் தோண்டியது நான்தான் என்பதற்குச் சான்றாக, நீர் இந்தப் பெண் ஆட்டுக்குட்டிகள் ஏழையும் என்னிடமிருந்து பெற்றுக்கொள்ளும் என்றார்.

31 அதன் காரணமாக அந்த இடம் பெயேர்செபா மீ என்று அழைக்கப்பட்டது. ஏனென்றால், அங்குத்தான் இருவரும் ஆணையிட்டு வாக்களித்துக் கொண்டனர்.

32 இவ்வாறு, பெயேர்செபாவில் உடன்படிக்கை செய்து கொண்டார்கள். இதன் பின் அபிமெலக்கும் அவன் படைத்தலைவன் பிக்கோலும் பெலிஸ்தியர் நாட்டிற்குத் திரும்பிச் சென்றனர்.

33 ஆபிரகாமோ பெயேர்செபாவில் ஏசல் மரத்தை நட்டு, அங்கு என்றும் வாழும் இறைவனாகிய ஆண்டவரின் திருப்பெயரைத் தொழுதார்.

34 அவர் பெலிஸ்தியர் நாட்டில் நெடுங்காலம் குடியிருந்தார்.

## தொடக்கநூல் அதிகாரம் – 21 – திருவிவிலியம்

### ஈசாக்கைப் பலியிட ஆபிரகாமுக்குக் கட்டளை

1 இந்நிகழ்ச்சிகளுக்குப் பின், கடவுள் ஆபிரகாமைச் சோதித்தார். அவர் அவரை நோக்கி, ஆபிரகாம்! என, அவரும் இதோ! அடியேன் என்றார்.

2 அவர், உன் மகனை, நீ அன்பு கூரும் உன் ஒரே மகனான ஈசாக்கை அழைத்துக்கொண்டு மோரியா நிலப்பகுதிக்குச் செல். அங்கு நான் உனக்குக் காட்டும் மலைகளில் ஒன்றின் மேல் எரி பலியாக அவனை நீ பலியிடவேண்டும் என்றார்.

3 அவ்வாறே, ஆபிரகாம் அதிகாலையில் எழுந்து தமது கழுதைக்குச் சேணமிட்டு, தம் வேலைக்காரருள் இருவரையும் தம் மகன் ஈசாக்கையும் அழைத்துக் கொண்டு எரி

# BIBLE




பலிக்கு வேண்டிய விறகுக் கட்டைகளை வெட்டிய பின், கடவுள் தமக்குக் குறிப்பிட்டிருந்த இடத்தை நோக்கிப் புறப்பட்டுச் சென்றார்.

4 மூன்றாம் நாள் ஆபிரகாம் கண்களை உயர்த்தி அந்த இடத்தைத் தூரத்திலிருந்து பார்த்தார்.

5 உடனே ஆபிரகாம் தம் வேலைக்காரர்களை நோக்கி, நீங்கள் கழுதையோடு இங்கேயே காத்திருங்கள். நானும், பையனும் அவ்விடம் சென்று வழிபாடு செய்தபின் உங்களிடம் திரும்பி வருவோம் என்றார்.

6 பின் ஆபிரகாம் எரி பலிக்கு வேண்டிய விறகுக் கட்டைகளை எடுத்துத் தம் மகன் ஈசாக்கின் மீது வைத்தார். நெருப்பையும் கத்தியையும் தம் கையில் எடுத்துக் கொண்டார். இவ்வாறு, இருவரும் சேர்ந்து சென்றனர்.

7 அப்பொழுது, ஈசாக்கு தன் தந்தையாகிய ஆபிரகாமை நோக்கி அப்பா! என, அவர், என்ன? மகனே! என்று கேட்டார். அதற்கு அவன், இதோ நெருப்பும் விறகுக் கட்டைகளும் இருக்கின்றன. எரிபலிக்கான ஆட்டுக்குட்டி எங்கே? என்று வினவினான்.

8 அதற்கு ஆபிரகாம், எரிபலிக்கான ஆட்டுக் குட்டியைப் பொறுத்த மட்டில், கடவுளே பார்த்துக்கொள்வார் மகனே என்றார். இருவரும் சேர்ந்து தொடர்ந்து நடந்தனர்.

9 ஆபிரகாமுக்குக் கடவுள் குறிப்பிட்டுச் சொல்லிய இடத்தை அவர்கள் அடைந்தனர். அங்கே ஆபிரகாம் ஒரு பலிபீடம் அமைத்து அதன்மேல் விறகுக் கட்டைகளை அடுக்கி வைத்தார். பின் தம் மகன் ஈசாக்கைக் கட்டி, பீடத்தின் மீதிருந்த விறகுக் கட்டைகளின் மேல் கிடத்தினார்.

10 ஆபிரகாம் தம் மகனை வெட்டுமாறு தம் கையை நீட்டிக் கத்தியைக் கையிலெடுத்தார்.

11 அப்பொழுது ஆண்டவரின் தூதர் வானத்தினின்று ஆபிரகாம்! ஆபிரகாம் என்று கூப்பிட, அவர் இதோ! அடியேன் என்றார்.

12 அவர், பையன்மேல் கை வைக்காதே; அவனுக்கு எதுவும் செய்யாதே; உன் ஒரே மகனையும் எனக்குப் பலியிட நீ தயங்கவில்லை என்பதிலிருந்து நீ கடவுளுக்கு அஞ்சுபவன் என்று இப்போது நான் அறிந்து கொண்டேன் என்றார்.


13 அப்பொழுது ஆபிரகாம் தம் கண்களை உயர்த்திப் பார்த்தார். இதோ, முட்செடிகளில் கொம்பு மாட்டிக்கொண்டு நின்ற ஓர் ஆட்டுக்கிடாயைக் கண்டார். உடனே ஆபிரகாம் அங்குச் சென்று அந்தக் கிடாயைப் பிடித்துத் தம் மகனுக்குப் பதிலாக எரி பலியாக்கினார்.

14 எனவே, ஆபிரகாம் அந்த இடத்திற்கு யாவேயிரே என்று பெயரிட்டார். ஆதலால்தான் மலையில் ஆண்டவர் பார்த்துக் கொள்வார் என்று இன்றுவரை வழங்கி வருகிறது.

15 ஆண்டவரின் தூதர் ஆபிரகாமை வானத்தினின்று மீண்டும் அழைத்து,

16 ஆண்டவர் கூறுவது இதுவே! நான் என்மீது ஆணையிட்டுக் கூறுகிறேன். உன் ஒரே மகனை எனக்குப் பலியிடத் தயங்காமல் நீ இவ்வாறு செய்தாய்.

17 ஆதலால், நான் உன்மீது உண்மையாகவே ஆசி பொழிந்து விண்மீன்களைப் போலவும் கடற்கரை மணலைப் போலவும் உன் வழிமரபைப் பலுகிப் பெருகச்




செய்வேன். உன் வழிமரபினர் தம் பகைவர்களின் வாயிலை உரிமையாக்கிக் கொள்வர்.

18 மேலும், நீ என் குரலுக்குச் செவிகொடுத்ததனால் உலகின் அனைத்து இனத்தவரும் உன் வழிமரபின் மூலம் தங்களுக்கு ஆசி கூறிக்கொள்வர் என்றார்.

19 பின் ஆபிரகாம் தம் வேலைக்காரரிடம் திரும்பி வந்தார். அவர்கள் ஒன்று சேர்ந்து பெயேர்செபாவுக்குத் திரும்பிச் சென்றார்கள். அங்கேயே ஆபிரகாம் வாழ்ந்து வந்தார்.

**நாகோரின் வழிமரபினர்**

20 இந்நிகழ்ச்சிகளுக்குப் பின், உன் சகோதரன் நாகோருக்கு மில்க்கா புதல்வரைப் பெற்றெடுத்திருக்கிறாள் என்று ஆபிரகாமுக்குச் சொல்லப்பட்டது.

21 மூத்த மகன் ஊசு, அவன் தம்பி பூசு, ஆராமின் தந்தையான கெமுவேல்,

22 கெசேது, அசோ, பில்தாசு, இதிலாபு, பெத்துவேல்.


23 பெத்துவேல் ரெபேக்காவின் தந்தை. இந்த எட்டுப் புதல்வர்களையும் மில்க்கா ஆபிரகாமின் சகோதரன் நாகோருக்குப் பெற்றெடுத்தாள்.

24 மேலும், அவனுக்கு மறுமனைவியாகிய இரயுமா, தெபாகு, ககாம், தகாசு, மாக்கா என்பவர்களைப் பெற்றெடுத்தாள்.

தொடரும்.....




# KURAN மெகா தொடர்
## PART - 9




2:155 وَلَنَبْلُوَنَّكُمْ بِشَىْءٍ مِّنَ الْخَـوْفِ وَالْجُـوْعِ وَنَقْصٍ مِّنَ الْاَمْوَالِ وَالْاَنْفُسِ وَالثَّمَرٰتِ‌ؕ وَبَشِّرِ الصّٰبِرِيْنَ

2:155. நிச்சயமாக நாம் உங்களை ஓரளவு அச்சத்தாலும், பசியாலும், பொருள்கள், உயிர்கள், விளைச்சல்கள் ஆகியவற்றின் இழப்பினாலும் சோதிப்போம்; ஆனால் பொறுமையுடையோருக்கு (நபியே!) நீர் நன்மாராயங் கூறுவீராக!

2:156 الَّذِيْنَ اِذَآ اَصَابَتْهُمْ مُّصِيْبَةٌ ۙ قَالُوْٓا اِنَّا لِلّٰهِ وَاِنَّـآ اِلَيْهِ رٰجِعُوْنَؕ


2:156. (பொறுமை உடையோராகிய) அவர்களுக்குத் துன்பம் ஏற்படும் போது, “நிச்சயமாக நாம் அல்லாஹ்வுக்கே உரியவர்கள்; நிச்சயமாக நாம் அவனிடமே திரும்பிச் செல்வோம்” என்று கூறுவார்கள்.

2:157 اُولٰٓـئِكَ عَلَيْهِمْ صَلَوٰتٌ مِّنْ رَّبِّهِمْ وَرَحْمَةٌ وَاُولٰٓـئِكَ هُمُ الْمُهْتَدُوْنَ

2:157. இத்தகையோர் மீது தான் அவர்களுடைய இறைவனின் நல்லாசியும், நற்கிருபையும் உண்டாகின்றன, இன்னும் இவர்கள் தாம் நேர் வழியை அடைந்தவர்கள்.

2:158 اِنَّ الصَّفَا وَالْمَرْوَةَ مِنْ شَعَآئِرِ اللّٰهِ‌ۚ فَمَنْ حَجَّ الْبَيْتَ اَوِ اعْتَمَرَ فَلَا جُنَاحَ عَلَيْهِ اَنْ يَّطَّوَّفَ بِهِمَا ‌ؕ وَمَنْ تَطَوَّعَ خَيْرًا ۙ فَاِنَّ اللّٰهَ شَاكِرٌ عَلِيْمٌ

2:158. நிச்சயமாக “ஸ∴பா”, “மர்வா” (என்னும் மலைகள்) அல்லாஹ்வின் அடையாளங்களில் நின்றும் உள்ளன; எனவே எவர் (க∴பா என்னும்) அவ்வீட்டை ஹஜ் அல்லது உம்ரா செய்வார்களோ அவர்கள் அவ்விரு மலைகளையும் சுற்றி வருதல் குற்றமல்ல; இன்னும் எவனொருவன் உபரியாக




நற்கருமங்கள் செய்கிறானோ, (அவனுக்கு) நிச்சயமாக அல்லாஹ் நன்றியறிதல் காண்பிப்பவனாகவும், (அவனுடைய நற்செயல்களை) நன்கறிந்தவனாகவும் இருக்கின்றான்.

2:159 بِ ۙ اُولٰٓـئِكَ اِنَّ الَّذِيْنَ يَكْتُمُوْنَ مَآ اَنْزَلْنَا مِنَ الْبَيِّنٰتِ وَالْهُدٰى مِنْۢ بَعْدِ مَا بَيَّنّٰهُ لِلنَّاسِ فِى الْكِتٰ
يَلْعَنُهُمُ اللّٰهُ وَ يَلْعَنُهُمُ اللّٰعِنُوْنَۙ


2:159. நாம் அருளிய தெளிவான அத்தாட்சிகளையும், நேர்வழியையும்-அதனை நாம் வேதத்தில் மனிதர்களுக்காக விளக்கிய பின்னரும் - யார் மறைக்கின்றார்களோ, நிச்சயமாக அவர்களை அல்லாஹ் சபிக்கிறான்; மேலும் அவர்களைச் சபிப்ப(தற்கு உரிமை உடைய)வர்களும் சபிக்கிறார்கள்.

2:160 لَحُوْا وَبَيَّنُوْا فَاُولٰٓـئِكَ اَتُوْبُ عَلَيْهِمْۚ وَاَنَا التَّوَّابُ الرَّحِيْمُ اِلَّا الَّذِيْنَ تَابُوْا وَاَصْ

2:160. எவர்கள் பாவமன்னிப்புத் தேடி(தங்களைத்) திருத்திக் கொண்டு (தாங்கள் மறைத்தவற்றை) தெளிவுபடுத்திக் கொண்டார்களோ அவர்களைத் தவிர (மற்றவர்கள் சாபத்திற்குரியவர்கள்.) அவர்களை நான் மன்னித்து விடுகிறேன். நான் மன்னிப்பவனாகவும் கிருபையுடையோனாகவும் இருக்கின்றேன்.

2:161 نَۙ اَجْمَعِيْنَ اِنَّ الَّذِيْنَ كَفَرُوْا وَمَاتُوْا وَهُمْ كُفَّارٌ اُولٰٓـئِكَ عَلَيْهِمْ لَعْنَةُ اللّٰهِ وَالْمَلٰٓـئِكَةِ وَالنَّاسِ ا

2:161. யார் (இவ்வேத உண்மைகளை) நிராகரிக்கிறார்களோ, இன்னும் (நிராகரிக்கும்) கா∴பிர்களாகவே மரித்தும் விடுகிறார்களோ, நிச்சயமாக அவர்கள் மீது, அல்லாஹ்வுடையவும்,




மலக்குகளுடையவும், மனிதர்கள் அனைவருடையவும் சாபம் உண்டாகும்.

2:162 خٰلِدِيْنَ فِيْهَا ۚ لَا يُخَفَّفُ عَنْهُمُ الْعَذَابُ وَلَا هُمْ يُنْظَرُوْنَ

2:162. அவர்கள் அ(ச் சாபத்)திலேயே என்றென்றும் இருப்பார்கள்; அவர்களுடைய வேதனை இலேசாக்கப்படமாட்டாது; மேலும், (மன்னிப்புக் கோர) அவர்களுக்கு அவகாசமும் கொடுக்கப்படமாட்டாது.


2:163 وَاِلٰهُكُمْ اِلٰهٌ وَّاحِدٌ ۚ لَاۤ اِلٰهَ اِلَّا هُوَ الرَّحْمٰنُ الرَّحِيْمُ

2:163. மேலும், உங்கள் நாயன் ஒரே நாயன்; அவனைத் தவிர வேறு நாயனில்லை அவன் அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன்.

Play CopyWordByWord2:164

2:164 اِنَّ فِىْ خَلْقِ السَّمٰوٰتِ وَالْاَرْضِ وَاخْتِلَافِ الَّيْلِ وَالنَّهَارِ وَالْفُلْكِ الَّتِىْ تَجْرِىْ فِى الْبَحْرِ
بِمَا يَنْفَعُ النَّاسَ وَمَاۤ اَنْزَلَ اللّٰهُ مِنَ السَّمَآءِ مِنْ مَّآءٍ فَاَحْيَا بِهِ الْاَرْضَ بَعْدَ مَوْتِهَا وَبَثَّ فِيْهَا مِنْ كُلِّ
دَآبَّةٍ وَّتَصْرِيْفِ الرِّيٰحِ وَالسَّحَابِ الْمُسَخَّرِ بَيْنَ السَّمَآءِ وَالْاَرْضِ لَاٰيٰتٍ لِّقَوْمٍ يَّعْقِلُوْنَ

2:164. நிச்சயமாக வானங்களையும், பூமியையும் (அல்லாஹ்) படைத்திருப்பதிலும்; இரவும், பகலும் மாறி, மாறி வந்து கொண்டிருப்பதிலும்; மனிதர்களுக்குப் பயன் தருவதைக் கொண்டு கடலில் செல்லும் கப்பல்களிலும்; வானத்திலிருந்து அல்லாஹ் தண்ணீரை இறக்கி அதன் மூலமாக பூமியை இறந்த பின் அதை உயிர்ப்பிப்பதிலும்; அதன் மூலம் எல்லா விதமான பிராணிகளையும் பரவ விட்டிருப்பதிலும், காற்றுகளை மாறி, மாறி வீசச் செய்வதிலும்; வானத்திற்கும், பூமிக்குமிடையே கட்டுப்பட்டிருக்கும் மேகங்களிலும் - சிந்தித்துணரும்





மக்களுக்கு (அல்லாஹ்வுடைய வல்லமையையும், கருணையையும் எடுத்துக் காட்டும்) சான்றுகள் உள்ளன.

2:165 وَمِنَ النَّاسِ مَنْ يَّتَّخِذُ مِنْ دُوْنِ اللّٰهِ اَنْدَادًا يُّحِبُّوْنَهُمْ كَحُبِّ اللّٰهِ ؕ وَالَّذِيْنَ اٰمَنُوْۤا اَشَدُّ حُبًّا لِّلّٰهِ ؕ
وَلَوْ يَرَى الَّذِيْنَ ظَلَمُوْۤا اِذْ يَرَوْنَ الْعَذَابَۙ اَنَّ الْقُوَّةَ لِلّٰهِ جَمِيْعًا ۙ وَّاَنَّ اللّٰهَ شَدِيْدُ الْعَذَابِ

2:165. அல்லாஹ் அல்லாதவர்களை அவனுக்கு இணையாக வைத்துக் கொண்டு, அவர்களை அல்லாஹ்வை நேசிப்பதற்கொப்ப நேசிப்போரும் மனிதர்களில் இருக்கிறார்கள்; ஆனால் நம்பிக்கை கொண்டவர்கள் அல்லாஹ்வை நேசிப்பதில் உறுதியான நிலையுள்ளவர்கள்; இன்னும் (இணை வைக்கும்) அக்கிரமக்காரர்களுக்குப் பார்க்க முடியுமானால், (அல்லாஹ் தரவிருக்கும்) வேதனை எப்படியிருக்கும் என்பதைக் கண்டு கொள்வார்கள்; அனைத்து வல்லமையும் அல்லாஹ்வுக்கே சொந்தமானது; நிச்சயமாக தண்டனை கொடுப்பதில் அல்லாஹ் மிகவும் கடுமையானவன் (என்பதையும் கண்டு கொள்வார்கள்).

2:166 اِذْ تَبَرَّاَ الَّذِيْنَ اتُّبِعُوْا مِنَ الَّذِيْنَ اتَّبَعُوْا وَرَاَوُا الْعَذَابَ وَتَقَطَّعَتْ بِهِمُ الْاَسْبَابُ

2:166. (இத்தவறான வழியில்) யாரைப் பின்பற்றினார்களோ அ(த்தலை)வர்கள் தம்மைப் பின்பற்றியோரைக் கைவிட்டு விடுவார்கள், இன்னும் அவர்கள் வேதனையைக் காண்பார்கள்; அவர்களிடையேயிருந்த தொடர்புகள் யாவும் அறுபட்டுவிடும்.




ۚ كَذٰلِكَ يُرِيْهِمُ اللّٰهُ  وَقَالَ الَّذِيْنَ اتَّبَعُوْا لَوْ اَنَّ لَنَا كَرَّةً فَنَتَبَرَّاَ مِنْهُمْ كَمَا تَبَرَّءُوْا مِنَّا 2:167
وَمَا هُمْ بِخٰرِجِيْنَ مِنَ النَّارِ اَعْمَالَهُمْ حَسَرٰتٍ عَلَيْهِمْ

2:167. (அத்தலைவர்களைப்) பின்பற்றியவர்கள் கூறுவார்கள்: “நமக்கு (உலகில் வாழ) இன்னொரு வாய்ப்புக் கிடைக்குமானால், அ(த்தலை)வர்கள் நம்மைக் கைவிட்டு விட்டதைப் போல் நாமும் அவர்களைக் கைவிட்டு விடுவோம்.” இவ்வாறே அல்லாஹ் அவர்கள் செய்த செயல்களை அவர்களுக்குப் பெருந்துக்கம் அளிப்பதாக எடுத்துக் காட்டுவான்; அன்றியும், அவர்கள் நரக நெருப்பினின்றும் வெளியேறுகிறவர்களும் அல்லர்.


وَّلَا تَتَّبِعُوْا خُطُوٰتِ الشَّيْطٰنِؕ اِنَّهٗ  ۖ يٰۤاَيُّهَا النَّاسُ كُلُوْا مِمَّا فِى الْاَرْضِ حَلٰلًا طَيِّبًا 2:168
لَـكُمْ عَدُوٌّ مُّبِيْنٌ

2:168. மனிதர்களே! பூமியிலுள்ள பொருட்களில், அனுமதிக்கப்பட்டவற்றையும், பரிசுத்தமானவற்றையும் உண்ணுங்கள்; ஷைத்தானின் அடிச்சுவடுகளை பின்பற்றாதீர்கள் - நிச்சயமாக அவன் உங்களுக்கு பகிரங்கமான பகைவனாவான்.

اِنَّمَا يَاْمُرُكُمْ بِالسُّوْٓءِ وَالْفَحْشَآءِ وَاَنْ تَقُوْلُوْا عَلَى اللّٰهِ مَا لَا تَعْلَمُوْنَ 2:169

2:169. நிச்சயமாக அவன் தீயவற்றையும், மானக்கேடானவற்றையும் செய்யும்படியும்; அல்லாஹ்வைப் பற்றி நீங்கள் அறியாததைக் கூறும்படியும் உங்களை ஏவுகிறான்.

لَوْ كَانَ اٰبَآؤُهُمْ لَا وَاِذَا قِيْلَ لَهُمُ اتَّبِعُوْا مَآ اَنْزَلَ اللّٰهُ قَالُوْا بَلْ نَـتَّبِعُ مَآ اَلْفَيْنَا عَلَيْهِ اٰبَآءَنَا ؕ اَوَ 2:170
يَهْتَدُوْنَ يَعْقِلُوْنَ شَيْئًا وَّلَا



2:170. மேலும், "அல்லாஹ் இறக்கி வைத்த இ(வ்வேதத்)தைப் பின்பற்றுங்கள்" என்று அவர்களிடம் கூறப்பட்டால், அவர்கள் "அப்படியல்ல! எங்களுடைய மூதாதையர்கள் எந்த வழியில் (நடக்கக்) கண்டோமோ, அந்த வழியையே நாங்களும் பின்பற்றுகிறோம்" என்று கூறுகிறார்கள்; என்ன! அவர்களுடைய மூதாதையர்கள், எதையும் விளங்காதவர்களாகவும், நேர்வழிபெறாதவர்களாகவும் இருந்தால் கூடவா?


2:171 وَمَثَلُ الَّذِيۡنَ كَفَرُوۡا كَمَثَلِ الَّذِىۡ يَنۡعِقُ بِمَا لَا يَسۡمَعُ اِلَّا دُعَآءً وَّنِدَآءً ؕ صُمٌّۢ بُكۡمٌ عُمۡىٌ فَهُمۡ لَا يَعۡقِلُوۡنَ

2:171. அந்த கா∴பிர்களுக்கு உதாரணம் என்னவென்றால்; ஒரு (ஆடு, மாடு மேய்ப்ப)வனின் கூப்பாட்டையும், கூச்சலையும் தவிர வேறெதையம் கேட்டு, அறிய இயலாதவை(கால் நடை) போன்றவர்கள்; அவர்கள் செவிடர்களாகவும், ஊமையர்களாகவும், குருடர்களாகவும் இருக்கின்றனர்; அவர்கள் எ(ந்த நற்போ)தனையும் உணர்ந்து கொள்ளமாட்டார்கள்.

2:172 يٰۤاَيُّهَا الَّذِيۡنَ اٰمَنُوۡا كُلُوۡا مِنۡ طَيِّبٰتِ مَا رَزَقۡنٰكُمۡ وَاشۡكُرُوۡا لِلّٰهِ اِنۡ كُنۡتُمۡ اِيَّاهُ تَعۡبُدُوۡنَ

2:172. நம்பிக்கை கொண்டவர்களே! நாம் உங்களுக்கு அளித்துள்ளவற்றில் தூய்மையானவற்றையே உண்ணுங்கள்; நீங்கள் அல்லாஹ்வையே வணங்குபவர்களாக இருப்பீர்களாயின், அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தி வாருங்கள்.

தொடரும்.....




ஸாங்க்யயோகம். 49

ध्यायतो विषयान्पुंसः सङ्गस्तेषूपजायते ।
सङ्गात्सञ्जायते कामः कामात्क्रोधोऽभिजायते ॥


மனிதன் விஷயங்களைக் கருதும்போது அவற்றில் பற்றுத லுண்டாகிறது. பற்றுதலால் விருப்ப முண்டாகிறது. விருப்பத்தால் சினம் பிறக்கிறது. 62

क्रोधाद्भवति सम्मोहः सम्मोहात्स्मृतिविभ्रमः ।
स्मृतिभ्रंशाद्बुद्धिनाशो बुद्धिनाशात्प्रणश्यति ॥

சினத்தால் மயக்கம்; மயக்கத்தால் நினைவுத் தவறுதல்; நினைவுத் தவறுதலால் புத்தி நாசம்; புத்தி நாசத்தால் அழிகிறான். 63

रागद्वेषवियुक्तैस्तु विषयानिन्द्रियैश्चरन् ।
आत्मवश्यैर्विधेयात्मा प्रसादमधिगच्छति ॥६४॥

விழைதலும் பகைத்தலு மின்றித் தனக்கு வசப்பட்ட புலன்களுடன் விஷயங்களிலே ஊடாடுவோனைத் தன் விதிக்குத் தான் உட்பட்ட மனிதன் ஆறுதலடைகிறான். 64






प्रसादे सर्वदुःखानां हानिरस्योपजायते ।
प्रसन्नचेतसो ह्याशु बुद्धिः पर्यवतिष्ठते ॥ ६५ ॥


சாந்தி நிலையில் மனிதனுக்கு எல்லாத் துன்பங்களும் அழிகின்றன. சித்தம் சாந்தி பெற்றபின் ஒருவனுடைய புத்தி விரைவிலே நிலைப்படுகிறது. 65

नास्ति बुद्धिरयुक्तस्य न चायुक्तस्य भावना ।
न चाभावयतः शान्तिरशान्तस्य कुतः सुखम् ॥

யோகமில்லாதவனுக்கு புத்தியில்லை. யோகமில்லாதவனுக்கு மனோபாவனையில்லை. மனோபாவனையில்லாதவனுக்கு சாந்தியில்லை. சாந்தியில்லாதவனுக்கு இன்பமேது? 66

इन्द्रियाणां हि चरतां यन्मनोऽनुविधीयते ।
तदस्य हरति प्रज्ञां वायुर्नावमिवाम्भसि ॥ ६७ ॥

இந்திரியங்கள் சலிக்கையில் ஒருவனுடைய மனமும் அவற்றைப் பின்பற்றிச் செல்லுமாயின், அம்மனம் கடலில் தோணியைக் காற்று மோதுவது போல் அறிவை மோதுகிறது. 67







**तस्माद्यस्य महाबाहो**
**निगृहीतानि सर्वशः ।**
**इन्द्रियाणीन्द्रियार्थेभ्य-**
**स्तस्य प्रज्ञा प्रतिष्ठिता ॥ ६८ ॥**

ஆதலால், பெருந் தோளாய், யாங்கணும் விஷயங்களினின்றும் இந்திரியங்களைக் கட்ட வல்லான் எவனோ, அவனறிவே நிலை கொண்டது. 68

**या निशा सर्वभूतानां**
**तस्यां जागर्ति संयमी ।**
**यस्यां जाग्रति भूतानि**
**सा निशा पश्यतो मुनेः ॥ ६९ ॥**

எல்லா உயிர்களுக்கும் இரவாகிய நேரத்தில், (தன்னைக் கட்டிய) முனி விழித்திருக்கிறான். மற்ற உயிர்கள் விழித்திருக்கும் நேர மெதுவோ அதுவே முனிக் கிரவு. 69







आपूर्यमाणमचलप्रतिष्ठं
समुद्रमापः प्रविशन्ति यद्वत् ।
तद्वत्कामा यं प्रविशन्ति सर्वे
स शान्तिमाप्नोति न कामकामी ॥ ७० ॥

கடலில் நீர்த் தொகுதிகள் வந்து விழுகையில் அது மேன்மேலும் நிரப்புதற் குரிதாய் அசையா நிலை கொண்டிருப்பது போலே, விருப்பங்கள் தன்னுள்ளே புகும்போது இயல்வான் எவனோ அவன் சாந்தி யடைகிறான். விருப்பங்களை விரும்புவோன் அதனை யடையான். 70

विहाय कामान्यः सर्वा-
न्पुमांश्चरति निःस्पृहः ।
निर्ममो निरहंकारः
स शान्तिमधिगच्छति ॥ ७१ ॥

இச்சை யற்றான், எல்லா இன்பங்களையுந் துறந்தான், என தென்பதற்றான், யா னென்ப தற்றான், அவனே சாந்தி நிலை யடைகிறான். 71







एषा ब्राह्मी स्थितिः पार्थ नैनां प्राप्य विमुह्यति ।
स्थित्वाऽस्यामन्तकालेऽपि ब्रह्म निर्वाणमृच्छति ॥

பார்த்தா, இது பிரம ஸ்திதி. இதை யடைந்
தோன் பிறகு மயங்குவதில்லை. இறுதிக் காலத்தி
லேனும் இதில் நிலை கொள்வோன் பிரம நிர்
வாண மெய்துகிறான். 72

इति श्रीमद्भगवद्गीतासूपनिषत्सु ब्रह्मविद्यायां
योगशास्त्रे श्रीकृष्णार्जुनसंवादे
सांख्ययोगो नाम
द्वितीयोऽध्यायः ।

இங்ஙனம் உபநிஷத்தும், பிரம வித்தையும்,
யோக சாஸ்த்ரமும், ஸ்ரீ கிருஷ்ணார்ஜுன
ஸம்பாஷணையு மாகிய ஸ்ரீமத் பகவத்
கீதையில் "ஸாங்க்ய யோகம்" என்ற
இரண்டாம் அத்யாயம் முற்றிற்று.




# तृतीयोऽध्यायः

## மூன்றாம் அத்யாயம்.

### கர்மயோகம்.

अर्जुन उवाच—

ज्यायसी चेत्कर्मणस्ते
मता बुद्धिर्जनार्दन ।
तत्किं कर्मणि घोरे मां
नियोजयसि केशव ॥ १ ॥

அர்ஜுனன் சொல்லுகிறன் :—

ஜநார்த்தன, செய்கையைக் காட்டிலும் புத்தியே சிறந்த தென்பது நின் கொள்கையாயின் இந்தக் கொடிய செய்கையில் என்னைப் புகுத்துவதென்னே, கேசவா ? 1

தொடரும்.....

# Joe Biden vows to stand with Asia on freedom, hits out at China on Taiwan

**Joe Biden said Washington would start talks with partners in the Indo-Pacific about developing a regional economic framework, something critics say his regional strategy has lacked.**

Washington: President Joe Biden told Southeast Asian nations on Wednesday the United States would stand with them in defending freedom of the seas and democracy and called China's actions towards Taiwan "coercive" and a threat to peace and stability.

Speaking at a virtual East Asia Summit attended by Chinese Premier Li Keqiang, Biden said Washington would start talks with partners in the Indo-Pacific about developing a regional economic framework, something critics say his regional strategy has lacked.

Southeast Asia has become a strategic battleground between the United States and China, which controls most of the South China Sea, and Beijing has turned up military and political pressure on fiercely democratic Taiwan, a self-ruled island Beijing considers its own.

Biden reiterated that the United States had a "rock-solid" commitment to Taiwan. "We are deeply concerned by China's coercive ... actions," Biden said, charging that they "threaten regional peace and stability."

Li Keqiang told the summit, which brought together leaders of the 10-nation Association of Southeast Asian Nations (ASEAN) with regional partners, that upholding peace, stability, freedom of navigation and overflight in the South China Sea was in everyone's interest. "The South China Sea is our common home," he said.

Biden last week said the United States, which is obliged by a 1979 law to provide Taiwan with the means to defend itself, would come to Taiwan's defense if it was attacked by China. Those comments caused a stir because they appeared to depart from a long-held U.S. policy of "strategic ambiguity" as to how Washington would respond to such a scenario.

The White House said Biden was not signaling a change in U.S. policy toward Taiwan, and some analysts dismissed his comments as a gaffe.

Tensions between Taiwan and China have escalated in recent



weeks as Beijing has staged repeated air missions over the Taiwan Strait, the waterway separating the island and the mainland.

China expressed displeasure at Biden's comments last week, urging Washington "not to send the wrong signals to the forces of Taiwan independence, to avoid seriously harming Sino-U.S. ties and peace and stability in the Taiwan Strait."

Biden joined Southeast Asian leaders in rebuking Myanmar's junta.

"In Myanmar, we must address the tragedy caused by the military coup which is increasingly undermining regional stability," he said, calling for the release of political prisoners and a return to democracy.

ASEAN began three days of summits on Tuesday without a representative from Myanmar following its top general's exclusion for ignoring peace proposals.

Biden also said he would speak out for "human rights in Xinjiang and Tibet (and) the rights of the people of Hong Kong." China denies rights abuses in its outlying regions of Xinjiang and Tibet and in the former British colony of Hong Kong.

**BIDEN'S ECONOMIC INITIATIVE**

Biden said Washington would begin discussions with

partners in the Indo-Pacific to develop a regional economic framework.

Critics of U.S. strategy for the region point to its lack of an economic component after former President Donald Trump withdrew from the trade deal now known as the Comprehensive and Progressive Agreement for Trans-Pacific Partnership in 2017.

The Biden administration has so far avoided any moves to return to an agreement that critics say could cost U.S. jobs and a senior official of the U.S. administration stressed that the initiative the president referred to “is not a trade deal.”

“What the president said ... was that we will begin discussions with partners to develop an economic framework to position us well for the future – laser-focused on making life better for workers and the middle class - and that will guide our economic engagement in the region,” the official said.

A White House readout said the envisaged network would also "define our shared objectives around trade facilitation" as well as standards for decarbonisation and clean energy.

Australia and ASEAN agreed on Wednesday to establish a "comprehensive strategic partnership," a sign of Canberra's ambition to play a bigger role in the region.

Australian Prime Minister Scott Morrison said the pact would strengthen diplomatic and security ties and promised the country would "back it with substance".

Morrison sought to reassure ASEAN that a trilateral security pact agreed last month between the United States, Britain and Australia, under which Australia will get access to nuclear-powered submarines, would not be a threat to the region.





Lords Real Estate
India-Chennai City | Near City | All Property - Buying & Selling
Email : lionpaulraj@gmail.com Web : www.lordsclubs.com
98405 59673
97908 55633
Business Profits used for Social Services
LORDS
CLUBS INTERNATIONAL






LORDS CLUBS INTERNATIONAL

Govt. Reg. No. : 1359 / 2013

We Serve

Lords M. Paulraj

Founder & International President

LORDS CLUBS INTERNATIONAL

- Economic development
- Education Service
- Friendship
- Health service
- Human rights
- Leadership
- Political Service
- Social service
- Spirituality

For Membership Call 98 4055 9673

LORDS CLUBS INTERNATIONAL

Email : lordsclubsinternational@gmail.com

Web : www.lordsclubs.com




# LORDS M . PAUL RAJ, Founder & INTERNATIONAL PRESIDENT OF LORDS CLUBS INTERNATIONAL, IS ONE OF THE MOST SUCCESSFUL SOCIAL SERVICE PROVIDERS IN THE WORLD

International social workers help individuals, families, groups, neighborhoods, and communities around the world overcome the challenges they face, such as poverty, substance abuse, or even after a natural disaster.

However, finding international social work positions can be difficult because organizations need candidates that can help people overcome the specific obstacles facing citizens around the world.

Continue reading to find out about the regions that need social workers, a list of issues facing their citizens, and some organizations you could work for.
What Is International Social Work?

Social workers are committed to making a difference in the lives of people within communities. Therefore, international social workers diligently strive to ease suffering and better the lives of people in need around the world.
But that doesn't mean social workers do all of the work themselves.
Instead, social work is about helping those in need to discover new and innovative ways to resolve or cope with the challenges they face. That way, their clients have the skills, knowledge, and empowerment to improve their circumstances and overall life.

Lords Paul Raj, Founder & International President of Lord's Clubs International, is one of the most successful social service providers in the world.